மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி**, M.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 30 ஆம் நாள்

E.A.No..16/2023 in E.A.No.17/22 and EA.No.18/2022

in EP.No. 17/2019 in OS 109/2014

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம், முதல் தெருவில் வசித்து வரும் தங்கவேல் குமாரர், இந்து, சிவமதம், 42 வயதுள்ள கஜேந்திரன்(இறந்தார்).
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம், முதல் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் கஜேந்திரன் மனைவி இந்து, சிவமதம் 41 வயதுள்ள கவிதா அவருக்காக அவரது பவர் ஏஜெண்ட் மேற்படி முகவரியில் வசித்து வரும் தங்கவேல் மனைவி 69 வயதுள்ள ருக்மணி.
3. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம், முதல் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் கஜேந்திரன் மகன் இந்து, சிவமதம் 13 வயதுள்ள மைனர் ஆதித்தன்.
4. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம், முதல் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் கஜேந்திரன், இந்து, சிவமதம், 10 வயதுள்ள இளவர் அகிலன்
5. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம், முதல் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் தங்கவேல் மனைவி, 69 வயதுள்ள ருக்மணி.(3,4 மைனர்களுக்காக அவரது கார்டியனும், பாதுகாவலருமான 5 ம் மனுதாரர் ருக்மணி மூலமாக).

..... .மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புகடனாளிகள்

**//எதிர்//**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, கருவாக்குறிச்சி கிராமம்,

எண்.30 பிள்ளையார் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் தங்கப்ப கண்டியர் மகன்,இ ந்து, சிவமதம், 51 வயதுள்ள கோவிந்தராஜ் .

........எதிர்மனுதாரர்/மனுதாரர்/தீர்ப்புபெற்றவர்

இம்மனுவானது பொது அதிகார ஆவணத்தை ஏற்றுக்கொண்டு இடைநிலை மனுவினையும், அசல் நிறைவேற்று மனுவினையும் மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் 2 மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 08.12.2022, 06.01.2023
**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 20.01.2023
இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஜெயபால் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.
2. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு ஏப்ரல் 12--ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

**(ஒம்/-A.சீதாலெட்சுமி),**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)